| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| திரு.சா.சேதுராம வர்மா, | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி. |
| சென்னை - 600 006. | |

**ந.க.எண். 023720/ எச்1 / 2022** **நாள் : 22.12.2022**

**ஐயா/ அம்மையீர்,**

**பொருள்** : **சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - இடைநிலை மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – தனித் தேர்வர்கள் அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்கள் (Govt.Exams Service Centres) மூலம் ஆன்-லைனில் விண்ணப்பித்தல் – அறிவுரை வழங்கக் கோருதல் – தொடர்பாக.**

******

நடைபெறவிருக்கும் மார்ச் 2023, இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுத ஆன்-லைன் வழியாக விண்ணப்பிப்பதற்கு **26.12.2022 முதல் 03.01.2023** வரையிலான நாட்களில் (31.12.2022 (சனிக்கிழமை) மற்றும் 01.01.2023 (ஞாயிற்றுக் கிழமை) நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கு (Government Exams Service centres) நேரில் சென்று விண்ணப்பிக்கவேண்டும் எனவும், மேற்குறிப்பிட்ட தேதிகளில் விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் 05.01.2023 முதல் 07.01.2023 வரையிலான நாட்களில் ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும் எனவும் தனித்தேர்வர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தனித்தேர்வர்கள் சேவை மையங்களுக்கு 26.12.2022 முதல் வருகை புரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோருக்கு கீழ்க்கண்டவாறு ஆன்-லைன் மூலம் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய தங்களது ஆளுகைக்குட்பட்ட அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களின் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தி, பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. 26.12.2022 முதல் தேர்வர்கள் சேவை மையங்களுக்கு வருகைபுரிவார்கள். அவ்வாறு வருகைபுரிவோரிடம் உரிய ஆவணங்களைப் பெற்று சேவை மையங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ கொண்டு ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

2..

2. www.dge1.tn.gov.inஎன்ற இணையதளத்திற்குச் சென்று, Click here to access Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்த பின்னர் திரையில் தோன்றும் SSLC PRIVATE APPLICATION / HSE PRIVATE APPLICATION என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்றிருக்கும் சேவை மையங்கள் எவ்வாறு விண்ணப்பங்களைப் பெற வேண்டுமென்பதற்கான அறிவுரைகளை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

3. இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள், தேர்வுக்கால அட்டவணைகள் மற்றும் +1 / +2 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள் ஆகியவற்றை அதே இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து சேவை மையங்களின் அறிவிப்பு பலகையில் ஒட்டவேண்டும்.

4. அரசுத் தேர்வுகள் இயக்கக சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றி, தனித்தேர்வர்களது விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

5. தேர்வர்களின் விண்ணப்பங்ளை பெறுவதற்கு கடைசி நாளான 03.01.2023 / 07.01.2023 ஆகிய நாட்களில் அனைத்து விண்ணப்பங்களையும் பெற்று பதிவேற்றம் (Uploading) செய்த பின்னர், Report Section – Multiple report -ஐ Click செய்துதேர்வர் வகை வாரியான விவரங்களையும், கட்டணம் (Exam Fees & On-line Fees) தொடர்பான விவரங்களையும் பதிவிறக்கம் (Downloading) செய்ய வேண்டும்.

பின்னர் அதனடிப்படையில் தனித்தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தொகையினை (i) இடைநிலை பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான தொகை (10th Exam Fees + Other Fees) (ii) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான தொகை (+1 Exam Fees + Other Fees), (iii) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு விண்ணப்பங்களுக்கான தொகை (+2 Exam Fees + Other Fees), அரசாணை(ப) எண்.780, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.28.12.2017-ன்படி, பெறப்பட்ட (iv) இடைநிலை பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை (10th On-line Fees) (v) மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை (+1 On-line Fees) (vi) மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான ஆன்-லைன் கட்டணத் தொகை (+2 On-line Fees) என 6 வகைககளாக தனித்தனியாக பிரித்து, அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணத்தினை செலுத்திட வேண்டும்.

மேற்கண்டவாறு தேர்வர்களின் தேர்வுக் கட்டணத் தொகை மற்றும் ஆன்-லைன் கட்டணத்தொகையினை செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த தேர்வர்களின் விண்ணப்பங்கள் (உரிய இணைப்புகளுடன்) ஆகியவற்றினை கீழ்குறிப்பிட்டுள்ள நாட்களில் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் நேரில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

| விவரம் | வகுப்பு | விண்ணப்பம் மற்றும் கட்டண இரசீது ஒப்படைக்கும் நாள் |
|---|---|---|
| விண்ணப்பங்கள் மற்றும் கட்டண இரசீது (26.12.2022 முதல் 03.01.2023 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள்) | இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு | 09.01.2023 |
| சிறப்பு அனுமதி கட்டணம் (தக்கல்) (05.01.2023 முதல் 07.01.2023 வரை பெறப்பட்ட விண்ணப்பங்கள்) | | |

மேலும், ஆன்-லைனில் விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சேவை மையங்களுக்கான அறிவுரைகள் மற்றும் இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள் இக்கடிதத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. சேவை மையங்களுக்கான அறிவுரைகளைப் பின்பற்றியே தேர்வர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்ய வேண்டும் எனவும், விண்ணப்பங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பான சந்தேகங்கள் ஏதேனும் எழும்பட்சத்தில், அந்தந்த மாவட்டங்களில் உள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களையும், கீழ்க்குறிப்பிட்டுள்ள கைப்பேசி எண்களையும் தொடர்பு கொள்ள வேண்டும் எனவும் சேவை மையங்களுக்கு அறிவுறுத்துமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கைபேசி எண்**: 9498383075 / 9498383081

**இணைப்பு** :

1. சேவை மையங்களுக்கான அறிவுரைகள் (இடைநிலை மற்றும் மேல்நிலை)
2. தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்
3. 10, +1 / +2 தனித்தேர்வர்களுக்கான அறிவுரைகள்
4. +1 / +2 பழைய பாடத் திட்டத்திற்கு இணையான புதிய பாடத்திட்டத்திற்கான பாடங்கள்

ஒம்/-
இயக்குநர்

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – தகவலுக்காக
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள்

   – தகவலுக்காகவும், உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காகவும் நகல் அனுப்பப்படுகிறது.